# தேசத்தந்தை காந்தியடிகள் கண்ட வீரத்தமிழர்கள்

**A.டென்சிங்**
பி.ஏ.மூன்றாம் ஆண்டு, வரலாற்றுத்துறை
நாகரத்தினம் அங்காளம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை.

**முனைவர் ரா.தாமரைக்கண்ணன்**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
நாகரத்தினம் அங்காளம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை.

**முன்னுரை:**

இந்திய தேசத்தின் தந்தை மகாத்மா காந்தியடிகள் தனது நாட்குறிப்பில் எனக்கும் தமிழுக்கும் உள்ள உறவானது முற்பிவியின் காரணமாக எற்பட்டது என்று குறிப்பிட்டு இருந்தார். இதனை இணைத்து வைக்கும் பேற்றினைப் பெற்றவன் பாலசுந்தரம் என்ற தமிழர் ஆவார். இவர் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த ஒரு ஒப்பந்த பணியாள் ஆவார். ஒரு வெள்ளைக்காரரிடம் கொத்தடிமையாக பணியாற்றிவந்தவராவார். இவர்தான் காந்தியடிகளுக்கும் தமிழ் சமுதாயத்திற்கும் ஏற்படவிருந்த அன்புத் தொடர்பிற்கு காரணமானவனாவான். இந்த நிகழ்வு 1894 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இதனை 1925ல் தனது ‘‘சத்தியசோதனை’ என்ற நூலில் விரிவாக குறிப்பிட்டுள்ளார்.

**காந்த்தியடிகள் - பாலசுந்தரம் சந்திப்பு:**

காந்தியடிகளை மக்கள் மன்றத்திற்கு அறிமுகம் செய்து வைத்தவர் பாலசுந்தரம் ஆவார். இவர்களுடைய முதல் சந்திப்பில் பாலசுந்தரத்தின் பற்கள் உடைந்தும் இரத்தத்துடனும் வந்து நின்றார். அக்கால கட்டத்தில் காந்தி வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டிருந்தார். இந்த செய்திகளை காந்தியடிகள் தனது சத்திய சோதனை என்ற புத்தகத்தில் பதிவு செய்துள்ளார். பாலசுந்தரத்தை கடுமையாக தாக்கிய அவனது வெள்ளை முதலாளி மீது வழக்குத் தொடுத்தவர். அவ்வழக்கில் வெற்றி பெற்று பாலசுந்தரத்தை கொத்தடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொடுத்ததார். தமிழர்களுக்காக காந்தியடிகளின் முதல் வெற்றி என்றே கூறலாம். இதன் பயனாக தங்கள் நிலையை எடுத்துப் பேசுவதற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நேட்டாவில் ஒருவர் இருக்கிறார் என்ற நம்பிகைக பாலசுந்தரத்தின் முகத்தில் தென்பட்டது.

தென்னாப்பிரிக்காவில் மட்டுமல்ல இங்கிலாந்தினால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த காலணி நாடுகள் அனைத்து நாடுகளில் இருந்தும் ‘‘ஒப்பந்த கூலிகள்’’ என்ற பெயரில் கொத்தடிமைகளை கொண்டுவந்து பணியில் அமர்த்தினர். பாலசுந்தரத்தின் வழக்கு வெற்றியானது கொத்தடிமைகளாக இருந்துவந்த தமிழர்களுக்கு வயிற்றில் பால் வார்த்தது போல் இருந்தது. தமிழர்களுக்காக போராடி வெற்றிகண்ட காந்திக்கு தொடர்ந்து அடிமைத்தளைகளை அடியோடு ஒழிக்க ஒரு திசை திருப்பமாக மேற்கூறிய வழக்கு ஊக்கமாக இருந்தது. மேலும் காந்தியும் தமிழர்களும் நெருங்கி வர இவ்வழக்கு உதவியாக அமைந்தது. இந்த நிகழ்வு இந்தியாவில் தமிழகம் வரை பேசப்பட்டது. பிறகு பாலசுந்தரத்தின் மூலமாக ஒப்பந்த தொழிலாளர்களாகவும் சுரங்க வேலைத் தொழிலாளர்களாகவும் தின்க்கூலிகளாகவும் டிரான்ஸ்வால், நேட்டால் மாகாணங்களில் பணியில் அமர்த்தப்பட்டனர் தமிழர்கள். இவர்களின் நிலை கண்டு காந்தி மனம் உருகினார். அவர்களிடம் புதைந்திருந்த வீரத்தையும் அறியாமையையம் உணர்த்த வேண்டு என்று எண்ணினார். மேலும் தமிழர்கள் நம்பிக்கைக்கு பாத்தியமானவர்கள் என்பது கண்டு உள்ளம் பூரித்தார்.

வீரமிக்க போராட்ட குணம் கொண்ட தமிழர்களை வைத்து தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகத்தை நடத்தியும் காட்டினார். தமிழர்கள் உயிரை துச்சம் என நினைத்து காந்தியுடன் தோளோடு தோளாக நின்று உயிர் மூச்சு இருக்கும்வரை இறுதிவரை போராடினார். இவர்களின் செயல்கண்டு வியந்த காந்தி இவர்களின் தாய் மொழியான தமிழை கற்க வேண்டும் என்றும் அவர்களுடன் இணக்கத்தை பேண வேண்டும் என்றும் எண்ணம் கொண்டார்.

காந்தி இந்த நிகழ்வுகளை எல்லாம் தனது ‘‘**தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம்**’’ என்ற நூலில் இடம் பெறச் செய்தள்ளார். இந்த சத்தியாகிரகத்தில் தமிழர்களுக்கு இணையாக இந்தியாவில் எவரும் செயல்படவில்லை என்றெ கூறவேண்டும். தென்னாப்பிரிக்காவில் தமிழர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர்களில் சுவாமி நாகப்பனும் ஒருவர்.

**சுவாமி நாகப்பன்:**

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாகப்பன் பதினெட்டு வயதே ஆன இளைஞர் ஆவார். இவர் சத்தியாகிரகத்தில் பங்கு பெற்று சிறை சென்றார். சிறைச்சாலையில் அதிகாரிகள் சுவாமி நாகப்பனை சித்ரவதை செய்து வந்தனர். கடும் குளிரில் அதிகாலையில் கல் உடைக்கச் செய்தனர். அதன் விளைவாக கடுமையான காய்ச்சலில் விழுந்து மரணமடைந்தார். தனது இறுதி மூச்சுவரை ஒரு சத்தியாக்கிரகிக்கு உண்டான விதிப்படி அனைத்து இன்னல்களையும் ஏற்றுக் கொண்டு மௌனமாக இருந்து அனைத்து சோதனைகளையும் கடந்து இறதியில் தனது உயிரினையும் இழந்தார். இவரைப்பற்றி காந்தியடிகள் கூறும்போது, நாகப்பன் படிப்பறிவு இல்லாதவராக இருந்தாலும் அவரிடம் வீரம், பொறுமை, தேசபக்தி, மரண பயமின்றி இருத்தல், உறுதி நிலைப்பாடு போன்றவற்றில் சிறந்தவராக இருந்தார் என்றும் அவரிடம் என்ன தகுதிதான் இல்லை என்று கூறும் அளவிற்கு அனைத்துக் குணநலன்களையும் உடையவராக இருந்தார் என்று கூறினார்.

**வள்ளியம்மையும் காந்தியடிகளும்**:

தமிழகத்தின் வள்ளியம்மை வெறும் பதினாறு வயதே நிரம்பிய யுவதி ஆவார். இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரின் தந்தை முனுசாமி முதலியார் ஆவார். இவரின் மகளான வள்ளியம்மையும் சிறை சென்று வீடு திரும்பிய 2வது நாளில் உயிர் துறந்தார். இவர் தென்னாப்பிரிக்காவில் பிறந்தவராவார். இவர் சிறையில் இருந்து வெளியேறும் போது மயங்கிய நிலையில் இருந்தார். இவரை காந்தியும் போலக் என்ற நண்பரும் சேர்ந்து ஒரு ஜமுக்காளத்தில் படுக்க வைத்து தூக்கிச்சென்றனர். அதிகாரிகள் தூக்கி செல்லும் உபகரணம் கூட கொடுக்கவில்லை. மயக்கத்தில் இருந்து எழுந்த வள்ளியம்மாளிடம் காந்தி கேட்டார். சிறை சென்றதற்காக வருந்துகிறாயா? என்று கேட்டார். அதற்கு வள்ளியம்மை வருத்தமா? இல்லை. இப்போது கூட மீண்டும் சிறை செல்லத் தயார் என்று கூறினாள். மேலும் இதனால் நீ இறந்து போக நேர்ந்தால்? என்று கேட்க அதை நான் பொருட்படுத்துவதில்லை. தாய் நாட்டுக்காக உயிர் கொடுக்க விரும்பாதவர் யார்? என்ற பதிவேடு புன்னகையுடன் ஒரு இளம் பெண் நாட்டிற்காக போராடியதன் காரணமாக உயிர் துறந்து அழியாத புகழைப் பெற்றாள். இவரின் நினைவாக காந்தி ‘‘வள்ளியம்மைக்கு நினைவு மண்டபம்’’ நிறுவி அவருடைய சேவையை இந்தியா வாழும் வரை தென்னாப்பிரிக்க சத்தியாகிரகத்தின் வரலாற்றில் வள்ளியம்மாளின் பெயர் நிலைத்து நிற்கும் என்றும், தன் அண்ணன் இறப்பின் பாதிப்பைப் போன்று இன்று வள்ளியம்மையின் இறப்பு என்னை பாதித்தது என்று ‘‘ **இந்தியன் ஒப்பீனியன்**’’ என்ற இதழில் எழுதியிருந்தார்.

**நாராயணசாமி:**

நாராயணசாமியும் ஒரு சிறந்த சத்தியாகிரகி ஆவர். இவரையும் தென்னாப்பிரிக்க அரசு சிறை படுத்திச் சித்ரவரை செய்தது. பின்பு இந்தியாவிற்கு நாடு கடத்தினர். இவர் தென்னாப்பிரிக்காவில் பிறந்தவர். இந்தியாவை பார்த்ததே இல்லை. நாடு திரும்பியபோது கடுமையாக நோய்வாய்ப்பட்டு இருந்தார். மேலும் கப்பல் பயணத்தின்போது துணிகளும் பணமும் திருடப்பட்டுவிட்டது. கடும் குளிரில் நடுங்கியதோடு இல்லாமல் உணவு இன்றி பசியோடு இருக்க நேரிட்டது. நண்பர்களையும் சந்திக்க அனுமதி மறுத்தனர். இதன் காரணமாக உயிர்துறந்தார். நாராயணசாமி குறித்து காந்தியடிகள் இந்தியன் ஒப்பீனியன் இதழில் எழுதியபோது **‘‘எந்த சத்தியாகிரகிக்கும் சூட்ட முடியாத புகழ் மாலையை நாராயணசாமிக்கு சூட்டலாம் அவை பொருந்தும்’’** என்றும் அவன் பரிபூரண சத்தியாகிரகியாக இறந்தான், நாகப்பன் மற்றும் நாராயணசாமியை பெற்றோர்க்கு ‘‘ ஜே! ’’ என்று எழுதியிருந்தார்.

**ஜோசப் இராயப்பன்**:

ஜோசப் இராயப்பன் என்பவர் ஒரு ஒப்பந்தக் கூலியின் மகனாய் பிறந்து இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் B.A பட்டமும் ‘‘லிங்கன்ஸ் இன்’’ கழகத்தில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றவராவார். தென்னாப்பிரிக்க இந்திய சமூகத்தில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றவராவர். தென்னாப்பிரிக்க இந்திய சமூகத்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்ற மூன்று நபர்களில் ஒருவராவார். சத்தியாகிரகப் போரில் பங்கு பெற்று பலமுறை நாடு கடத்தப்பட்டுள்ளார். சிறைப்படுத்தப்பட்டு எல்லையற்ற துன்புறுத்தல்களை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். இவர் பாரம் தூக்குபவராகவும், துணிகள் சுமப்பவராகவும், விறகு வெட்டியும் வாழ்ந்து காட்டினார். இவரை சிறைக்கு கொண்டு

செல்லும்போது ஒரு குப்பை வண்டியில் கொண்டு சென்றனர். பிறகு காலில் செருப்பு இல்லாமல் நடத்தியே கொண்டு சென்றனர். கொலைக் குற்றவாளியைப் போல் நடத்தினர். ஆனால் இராயப்பனோ முன்னரைவிட மன உறுதியுடன் காணப்பட்டார்.

இவரைப்பற்றி காந்தியடிகள் " **படித்த இளைஞர்கள்**" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அதில் பரிஸ்டர் பட்டம் பெற்ற ஒருவர் இவ்வாறு யாரேனும் செய்வாரா? இராயப்பன் தெருவில் பொருட்களை விலைகூறி கூவி விற்றார். எவரும் நம்பமாட்டார்கள். ஆனால் சத்தியாகிரகத்தில் பங்கு பெற்று அதில் நம்பமுடியாத பலர் தங்கள் நிலை மறந்து தானே முன்வந்து சத்தியாகிரகத்தில் தன்னை இணைத்து உயிர்விட்டவர்களில் இராயப்பனும் 'சிறந்த நபர்' ஆவார். என்று வியந்து எழுதினார்.

**காந்தியடிகள் அறிந்த மற்ற தமிழ் வீரர்கள்**

மேற்கூறிய தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த தமிழ் வீரர்களைப் போன்று காந்தியடிகளுடன் சேர்ந்து சத்தியாகிரகத்தில் தொடர்புடையவர்களை காந்தியடிகள் தனது " **தென்னாப்பிரிக்கா சத்தியாகிரகம்** " என்ற நூலில் சிலர் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் இரத்தினம்பத்தர், வி.ஏ.செட்டியார், முனுசாமி, லாசரஸ். வின்செண்ட். மாணிக்கம்பிள்ளை தம்பி நாயுடு. பி.கே.நாயுடு, ஜாக் முதலி போன்றோர் ஆவர். மேலும் 1904-ல் டர்பன் நகருக்கு அருகில் உள்ள போனிக்ஸ் பண்ணையிலும், 1909-ல் ஜோகன்னஸ்பாக் நகரின் அருகே டால்ஸ்டாய் பண்ணையில் குடியேறிய இந்திய குடும்பங்களில் தமிழ்க் குடும்பங்கள் அதிகம் இருந்தனர்.

**சத்தியாகிரகத்தில் பெண்களின் பங்கு:**

தென்னாப்பிரிக்காவில் நடந்த காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் பெண்களையும் இணைய வைத்தது. அவற்றில் முதன்மையானவர் என்றால் 16 வயதே ஆன வள்ளியம்மையை குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர் மட்டும் அல்லாமல் தென்னபாப்பிரிக்காவில் குடியேறிய தமிழ் குடும்பங்களில் உள்ள பெண்கள் ஏராளமாளோர் கலந்து கொண்டனர் என்றும் ஆண்களுக்கு இணையாக வீரத்தோடும், பொறுமையுடனும், போராட்டக் குணத்தோடும் சிறப்பாக செயல்பட்டனர். சிறை செல்லவும் தயங்கவில்லை என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**:

காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு 1914ல் திரும்பும் போது நடந்த பிரிவுக் கூட்டத்தில் தமிழர்களை சந்தித்தார். "என் உடன்பிறந்த சகோதரர்களை சந்திப்பது போன்றே உணர்கிறேன்" என்றார். சத்தியாகிரக போராட்டத்தின் உக்கிரத்தைத் தாங்கியவர்கள் தமிழர்கள் தான் என்று கூறினார். உயிர் தியாகம் செய்தவர்களும் தமிழர்களே அதிகம் என்றார். போராட்டம் முடிவில் இறுதியாக சிறையில் இருந்து வெளிவந்தவர்களும் தமிழர்களே என்று தமிழர்களின் தியாகத்தை காந்தியடிகள் உரக்கக்கூறி பிரியாவிடை பெற்று இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.

**நூல்பட்டியல்**


1. வீ.செல்வராஜ், தமிழும் காந்தியும், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி மதுரை.
2. ராமச்சந்திர குஹா. தென்னாப்பிரிக்காவில் காந்தி (தமிழ்) கிழக்கு பதிப்பகம் 2015.
3. விகடன் 'தென்னாப்பிரிக்கா முதல் தென்குமரிவரை காந்தியை பிரமிக்க வைத்த தமிழர்கள்" 2019.
4. லூயிஸ் பிஷ்ஷர், மகாத்மா காந்தி, அவரது வாழ்க்கை & காலங்கள். பாரதிய வித்யா பவன், மும்பை.
5. என்.வி.கலைமணி, அன்னை கஸ்தூரிபாயின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், பாரதி நிலையம், சென்னை, 2002.